Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 281

சனிக்கிழமை
03 செப்ரெம்பர் 2022

ஆவணி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50




"நாடானா நாடே நாறிப்போய்க் கிடக்கேக்க அதிகாரிக்கு 42 ஆயிரம் ரூபாவுக்கு கரண்டி கேக்குதாமோ?"

115 மேலதிக வாக்குகளால்

# பட்ஜெட் நிறைவேற்றம்

## பெரும்பான்மையை தக்க வைத்த ரணில் கூட்டமைப்பு, சஜித் அணி புறக்கணிப்பு முன்னணி, ஜே.வி.பி. எதிர்ப்பு விக்னேஸ்வரன் பங்கேற்கவில்லை

கொழும்பு, செப்ரெம்பர் 3
2022ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நேற்றுமாலைநிறைவேற்றப் பட்டது. வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 120 வாக்குகளும், எதிராக 5 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இந்த வாக்கெடுப்பில் 43 உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர். 11 ▶

## அறுபதோடு செல்க அரசியல்வாதிகளே!

### நாடாளுமன்றில் கோரினார் துமிந்த திஸாநாயக்க



கொழும்பு, செப். 3
நாட்டின் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து சிந்தித்து 60 வயதுக்கு மேற்பட்ட அரசியல்வாதிகள் அரசியலில் இருந்து ஓய்வு பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற 11 ▶

## பொலிஸில் முறைப்பாட்டை மீளப்பெறச் சென்றவர் சாவு!

யாழ்ப்பாணம், செப். 3
வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை மீளபெற நேற்று மதியம் சென்றவர் மயங்கி வீழ்ந்த நிலை 11 ▶

## டொலரின் பெறுமதி சடுதியாக வீழும்!

### அலிசப்ரி எதிர்வுகூறல்

கொழும்பு, செப். 3
சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி ஆகியவற்றில் இருந்து 11 ▶

## நேற்று நள்ளிரவு வந்தார் கோத்தா

கொழும்பு, செப். 3
இலங்கையிலிருந்து தப்பியோடிய முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்று நள்ளிரவு 11.40 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார். அவரை அமைச்சர்கள் மற்றும் அரசியல்வாதிகள் நேரில் சென்று வரவேற்றனர்.
மக்கள் போராட்டங்களை எதிர்கொள்ள முடியாமல் 11 ▶

## 6 'கரண்டிகள்' ரூ.42 ஆயிரம்

### அதிகாரி செய்த ஆடம்பரம்

கொழும்பு, செப். 3
புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் உயர் அதிகாரி ஒருவருக்கு உண்பதற்கு 11 ▶

## மின்வெட்டு ஒரு மணிநேரம்

கொழும்பு, செப். 3
நாட்டில் இன்று முதல் நாளைமறுதினம் 5ஆம் திகதி வரை இரவில் 1 மணித்தியாலமே மின் துண்டிப்பு 11 ▶

## லிட்ரோ சிலிண்டரை டொலரில் வாங்கலாம்!

### வெளிநாட்டில் இருப்போருக்கு வாய்ப்பு

கொழும்பு, செப். 3
லிட்ரோ எரிவாயு சிலிண்டரை டொலரைச் செலுத்தி பதிவு செய்யும் முறை அடுத்த வாரம் முதல் அறிமுகப்படுத்தப்படும் என்று லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.
இதன் மூலம் வெளிநாடுகளில் இருப் 11 ▶

## பஸில் பற..பற!

கொழும்பு, செப். 3
முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவுக்கு வெளிநாடு செல்ல உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.
அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி வரை மாத்திரமே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## ஆசிரியர்களின் இடமாற்ற விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

கொழும்பு, செப். 3
2023 புதிய கல்வி ஆண்டு வரையில் ஆசிரிய இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் 11 ▶

தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் ஆகியோரின்

## நினைவேந்தல் நேற்று!



யாழ்ப்பாணம், செப். 3
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆலாலசுந்தரம் மற்றும் தர்மலிங்கம் ஆகியோரின் நினைவுநாள் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. 11 ▶

## மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக சிங்களவர்

### தகுதியானவர் மற்றும் மூப்புநிலையில் அதிகாரிகள் வடக்கில் இருக்கும் நிலையில் கொழும்பு அரசு ஓரவஞ்சனை

யாழ்ப்பாணம், செப். 3
வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக மருத்துவ நிபுணர் திலிப்லியனகே கொழும்பு சுகாதார அமைச்சால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதன் மூலம் இலங்கையின் 11 ▶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வடக்கு, கிழக்குப் பகுதியை தனி இராச்சியமாக்கச் சதியாம்!

## அமெ. தூதுவர் முன்னெடுக்கிறார் என வாசுதேவ நாணயக்கார குற்றச்சாட்டு

**கொழும்பு, செப். 3**

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை தனி இராச்சியமாக்கி அங்கு அமெரிக்காவின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவது இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கின் நோக்கம் என கடுமையாக குற்றஞ்சாட்டிய இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சியின் சுயாதீன உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார, அமெரிக்க தூதுவர் மீதான தமது கடுமையான கண்டனத்தை நாடாளுமன்றில் முன்வைப்பதாகவும் சபையில் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இடைக்கால வரவு - செலவு திட்டத்தின் மீதான இரண்டாவது நாள் விவாதத்தின்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், இலங்கையின் உள்ளக நிர்வாகத்தில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஏன் தலையிடுகிறார்? வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை தனி இராச்சியமாக மாற்றியமைக்கும் விடயதானத்தை அமெரிக்கத் தூதுவர் பொறுப்பேற்றுள்ளார். இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிட அமெரிக்கத் தூதுவருக்கு அதிகாரமில்லை.

காலிமுகத்திடல் போராட்டத்துக்கு அமெரிக்கத் தூதுவர் ஒத்துழைப்பு வழங்கினார். முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை போராட்டத்தின் ஊடாக விரட்டினார். ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றார். தற்போதும் அமெரிக்கத் தூதுவர் போராட்டத்துக்கு அனுசரணை வழங்குகிறார்.

இலங்கையில் போராட்டத்தை உருவாக்கும் முயற்சியில் அமெரிக்கத் தூதுவர் ஈடுபடுகிறார். அதற்காக நிதி செலவு செய்யப்படுகிறது.

வடக்கு- கிழக்கு மாகாணத்துக்குப் பிறிதொரு இராச்சியத்தைப் பெற்றுக்கொடுக்க அமெரிக்கத் தூதுவர் முயற்சிப்பது தமிழ், முஸ்லிம் மக்களுக்காக அல்ல. அது அமெரிக்கா, இலங்கையை பலவீனப்படுத்தி, இராச்சியமாக வேறுப்படுத்தி எம்.சி.சி. ஒப்பந்தத்தை செயற்படுத்தும் நோக்கம் அமெரிக்காவுக்கு உண்டு.

இலங்கையை யுத்தத் தளமாக மாற்றியமைக்கும் தேவை அமெரிக்காவுக்கு உண்டு. அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிற்கு நாடாளுமன்றில் எமது எதிர்ப்பை வெளிப்படுத்துகிறோம். இதனை நாடாளுமன்ற ஹன்சாட்டில் பதிவு செய்யுங்கள் - என்றார். (ம)



## சர்வதேச நாணய நிதியம் நாட்டை பலவீனப்படுத்தும்

### வாசுதேவ எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 3

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளைச் செயற்படுத்தினால், அது இலங்கையைப் பலவீனப்படுத்தும் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணயக்கார.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இடைக்கால வரவு - செலவு திட்டத்தின் மீதான இரண்டாவது நாள் விவாதத்தின்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியம் 2.9 பில்லியன் அமெரிக்க டொலரை வழங்குவதாகக் குறிப்பிட்டுள்ளது.

ஆனால் இந்தியா குறுகிய காலப்பகுதியில் 3 பில்லியன் டொலரை வழங்கியுள்ளது. பிற தரப்பினரிடமிருந்து கடன் பெற்றுக்கொள்ள சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது அவசியம் என அரசாங்கத்தால் குறிப்பிடப்படுகிறது. அவ்வாறாயின் தொடர்ந்து கடன் பெறுவதை அரசாங்கம் பரிந்துரைக்கிறதா?

கடன்சுமை அதிகரிக்கப்படுமாயின் அதனை எவ்வாறு முகாமைத்துவம் செய்வது? கடனை எவ்வாறு திருப்பிச் செலுத்துவது? கடன் பெறுவதற்கான யோசனை முன்வைக்கப்படுகிறது. ஆனால் கடனைத் திருப்பி செலுத்தும் யோசனை முன்வைக்கப்படுவதில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு பற்றி குறிப்பிடுபவர்கள், விதிக்கப்படும் நிபந்தனைகளால் ஏற்படும் பாதிப்பு குறித்து கவனம் செலுத்தவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. தேசிய கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட பல நிபந்தனைகள் கடினமானவை. இது மக்களின் விரோதத்தைத் தீவிரப்படுத்தும்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடினமான நிபந்தனைகளை செயற்படுத்தினால் அரசாங்கம் மக்களின் கடுமையான எதிர்ப்புக்கு முகம் கொடுக்க நேரிடும் - என்றார். (ம)

## எரிவாயு விலை மீண்டும் குறைப்பு

கொழும்பு, ஓக. 3

5ஆம் திகதி நள்ளிரவு முதல் மீண்டும் எரிவாயு விலை குறைக்கப்படவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, புதிய விலைகள் பின்னர் அறிவிக்கப்படும் என லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சந்தையில் எரிவாயு விலை குறைந்துள்ள நிலையில், விலை குறைப்பு அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## 2023 மார்ச் மாதத்துக்குள் உள்ளூராட்சித் தேர்தல்!

கொழும்பு, ஓக. 3

உள்ளூராட்சித் தேர்தல்களை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலை கடந்த 2018ஆம் ஆண்டில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தபோதிலும், அமைச்சருக்குள்ள அதிகாரத்தின் கீழ் உள்ளூராட்சிசபைகளின் ஆயுட்காலம் 2023ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டது. எனினும், எதிர்வரும் 20ஆம் திகதிக்குப் பின்னர் உள்ளூராட்சித் தேர்தல் குறித்த அதிகாரம் ஆணைக்குழு வசமாகும்.

ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதியன்று வாக்காளர் பட்டியல் இறுதிப்படுத்தப்படவுள்ளதால், அதன்பின் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது குறித்து தீர்மானிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## மருந்துகளின் விலைகளில் திருத்தங்கள்!

கொழும்பு, ஓக. 3

43 மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் அதிகபட்ச விலைகள் திருத்தப்பட்டு, வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை அதிகாரசபை சட்டத்தின் விதிகளின்கீழ் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் அதிகபட்ச சில்லறை விலையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. (ம)

## தகவலறியும் உரிமை: புதிய அணுகுமுறை

கொழும்பு, செப். 3

அரச நிறுவனங்களிடமிருந்து தகவல்களைப் பெறுவதில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்காக புதிய அணுகுமுறையொன்றை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தகவல் பெறுவதற்காக விண்ணப்பப்படிவத்தை அனுப்பும்போது முகவரியுடன், தொலைபேசி இலக்கம், வட்ஸ்அப் இலக்கம், மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றையும் குறிப்பிடுமாறு பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு, விண்ணப்பதாரிகளைக் கோரியுள்ளது. கடிதங்கள் மூலம் கோரப்படும் தகவல்களை அனுப்புவதில் ஏற்படக்கூடிய காலதாமதத்தைத் தவிர்ப்பதே இதன் முக்கியமான நோக்கமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### துமிந்த சில்வாவின் பொதுமன்னிப்பு வழக்கு

## விசாரணைகளில் இருந்து நீதியரசர் ஜயவர்தன விலகல்

கொழும்பு, செப். 3

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி யளித்த பொதுமன்னிப்பை சவாலுக்கு உட்படுத்திய வழக்குகள் தொடர்பிலான விசாரணையிலிருந்து உயர் நீதிமன்ற நீதியரசர் பிரியந்த ஜயவர்தன விலகியுள்ளார்.

துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி வழங்கிய மன்னிப்பின் சட்டபூர்வ தன்மையை சவாலுக்கு உட்படுத்தி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, அவ [illegible] பிரேமசந்திர மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினரான சட்டத்தரணி கஸ்ஸாலி ஹுசைன் ஆகியோர் தாக்கல் செய்துள்ள மூன்று அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தன.

நீதியரசர் பிரியந்த ஜயவர்தன தலைமையிலான, நீதியரசர்களான யசந்த கோதாகொட, அர்ஜுன ஒபேசேகர ஆகியோரைக் கொண்ட நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இவ்வழக்குகள் விசாரணைக்கு வந்தன.

இதன்போதே விசாரணையிலிருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக விலகுவதாக நீதியரசர் பிரியந்த ஜயவர்தன அறிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா – இலங்கை உறவில் மூன்றாம் தரப்பு வரமுடியாது

## 'நன்றி இந்தியா' நிகழ்வில் அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



கொழும்பு, செப். 3

**சகோதரர்களைப்போன்று இலங்கைக்கும் இந்தியாவுக்கும் அவ்வப்போது கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டாலும் அவை விரைவிலேயே தீர்ந்துவிடும். ஆனால், இந்தியா - இலங்கைக்கு இடையிலான உறவில், மூன்றாம் தரப்பு உள்நுழைய முடியாது. அதற்கு இலங்கை ஒருபோதும் அனுமதிக்காது என்று தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி.**

பொருளாதார நெருக்கடிகளில் இருந்து இலங்கையை விடுவிப்பதற்காக, இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், 'நன்றி இந்தியா' என்ற நிகழ்வு கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அலி சப்ரி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்த ஈராக், லிபியா, வெனிசூலா ஆகிய நாடுகளால் அதிலிருந்து மீண்டு வரமுடியவில்லை. ஏனெனில் பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து அந்நாடுகளின் அனைத்துத் துறைசார் கட்டமைப்புக்களும் முழுமையாகச் சீர்குலைந்துவிட்டன. ஆனால் எமது நாடு அவ்வாறானதொரு நிலைக்குத் தள்ளப்படாமல் மீண்டெழுவதற்கு இந்தியாவினால் வழங்கப்பட்ட உதவிகளே முக்கிய காரணமாகும். இலங்கை மிகவும் கடினமான சூழ்நிலைக்கு முகங்கொடுத்திருந்தபோது இந்தியாவால் வழங்கப்பட்ட உதவிகளின் முக்கியத்துவத்தை அனைவரும் புரிந்து கொள்வார்களா எனத்தெரியவில்லை. சகோதரர்களைப்போன்று எமக்கிடையிலும் (இலங்கை - இந்தியா) அவ்வப்போது கருத்து முரண்பாடுகள் ஏற்படும். இருப்பினும் அவை விரைவிலேயே தீர்ந்துவிடும். அத்தகைய கருத்து முரண்பாடுகள் எமது இருநாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவதாகவே அமையும். ஆனால் எம்மிருவருக்கும் இடையில் வேறெந்த மூன்றாவது தரப்பும் உள்நுழையமுடியாது. உங்களால் உரியநேரத்தில் வழங்கப்பட்ட உதவிகள் கவனிக்கப்படாமல் போகவில்லை. மாறாக அவை எமது குருதியில் கலந்திருக்கின்றன - என்றார். (ம)

# நாணய நிதியத்தை நாடுமாறு இந்தியாவே ஊக்கப்படுத்தியது

### அந்த நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்தமொரகொட இவ்வாறு தெரிவிப்பு

கொழும்பு, செப்.3



சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை நம்பிக்கை தருகின்றது என தெரிவித்துள்ள இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட, இந்தியாவே நாணய நிதியத்தின் உதவியை நாடுமாறு ஊக்கப்படுத்தியது என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மிலிந்த மொரகொட மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணயநிதியத்துடனான ஆரம்ப கட்ட உடன்படிக்கையின் கீழ் இலங்கை பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்காக 2.9 பில்லியன் டொலரை பெறவுள்ளமை பொருளாதார மீட்சி தொடர்பிலான முதல் நடவடிக்கை. இலங்கை முதலீடுகளையும் வெளிநாட்டு வருவாய்களையும் கவர்வதற்கான நம்பிக்கையை நாட்டுக்கும் முதலீட்டாளர்களுக்கும் இது வழங்கும்.

இந்த வருடம் தனது வரலாற்றில் மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கை முன்னொருபோதும் இல்லாத குழப்ப நிலைக்குள் சிக்கியது. மருந்து எரிபொருள் போன்றவற்றுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு, அது பெரும் ஆர்ப்பாட்டங்களுக்கு வழிவகுத்தது.

சர்வதேச நாணயநிதியத்துடனான உடன்படிக்கையைத் தொடர்ந்து, வலுசக்தி, எண்ணெய், சுற்றுலாத் துறை ஆகிய துறைகளில் இந்தியாவின் உதவியுடன் கட்டமைப்பு மாற்றங்களை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் - என்றார். (ம)

# கடன் மறுசீரமைப்பு இலங்கைக்கு தேவை

### ஜப்பானின் நிதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 3



இலங்கைக்கு கடன் வழங்கிய அனைத்து நாடுகளும் இலங்கையின் கடன்மறுசீரமைப்பு குறித்த பேச்சுக்களில் ஈடுபடவேண்டும் என ஜப்பானின் நிதியமைச்சர் சுனிச்சி சுசுக்கி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியா சீனாவுடன் ஏனைய நாடுகள் இலங்கையின் கடன்மறுசீரமைப்பு குறித்து பேச்சுக்களை மேற்கொள்வது அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு சர்வதேச நாணயநிதியம் கடனுதவி வழங்குவதற்கு இணங்கியுள்ள நிலையிலேயே ஜப்பானின் நிதியமைச்சர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். (ம)

# பகிர்ந்தளிக்கப்படும் பெற்றோல் போதாது

### வெளிக்கள அலுவலர்கள் கவலை

சாவகச்சேரி, செப். 3

தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கியூ.ஆர். திட்டத்தின் அடிப்படையில் வழங்கப்படும் எரிபொருள் தமது பணிக்கு வந்து செல்வதற்கு போதாமையாக உள்ளது என யாழ். மாவட்ட அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் வெளிக்கள அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

யாழ்.மாவட்டத்திலுள்ள அலுவலகங்களில் ஏனைய பிரதேசங்களை சேர்ந்த அலுவலர்கள் பலர் தினமும் தமது சொந்தவாகனங்களில் வந்து செல்கின்றனர். கியூ.ஆர். நடைமுறையில் வாரந்தம் 4 லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்படுகிறது. இந்த 4 லீற்றர் பெற்றோல் வாரத்தின் ஐந்து அல்லது ஆறு நாள்கள் பணிக்கு வந்து செல்வதற்கு போதாமல் உள்ளது.

ஆகவே தூரஇடங்களில் கடமைக்கு வந்துசெல்லும் வெளிக்கள அலுவலர்களுக்கு வாரத்தில் இருதடவைகள் அல்லது வாரத்தில் வழங்கப்படும் எரிபொருளை இருமடங்காக அதிகரித்து விநியோகிக்க அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றனர். (ச-9)

# மத்திய வங்கி ஆளுநரை மாற்ற அரசு சதித்திட்டம்

### சஜித் தெரிவிப்பு

கொழும்பு, செப். 3



நாட்டை வங்குரோத்தடையச் செய்யும் சதித்திட்டத்துக்கு கடந்த அரசாங்கத்தின் அனைத்துப் பிரதானிகளும் பொறுப்புக்கூற வேண்டிய சூழ்நிலையில், அதை மறந்து மத்திய வங்கி ஆளுநரை இலக்கு வைத்து பல கடுமையான அவதூறுகளும் குற்றச்சாட்டுகளும் அரசாங்க தரப்பால் முன்வைக்கப்பட்டு வருகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

மத்திய வங்கியின் ஆளுநர் இரட்டைக் குடியுரிமை கொண்டவர் என்று குற்றஞ்சாட்டி, தனது கைக்கூலிகளில் ஒருவரை மத்திய வங்கியின் ஆளுநராக்கும் சதி நாடகமொன்றை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. மத்திய வங்கி ஆளுநர் கலந்துகொண்ட நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நடத்தை மிகவும் கேவலமானது.

சர்வகட்சி அரசாங்கம் குறித்து நகைப்புக்கதை பேசுவதை விட இந்த நேரத்தில் அரசாங்கத்தின் பிரதானிகளுக்கு இடையில் அடிப்படை உடன்பாடு ஏற்படவேண்டும். இவ்வாறானதோர் உடன்பாடு இல்லாத சூழ்நிலையில் சர்வகட்சி ஆட்சியைப் பற்றி சிந்திப்பது கூட சாத்தியமா? எனவே இந்த இக்கட்டான தருணத்தில் நாட்டைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைக்கு எனது ஆதரவைக் கோரும் விடயத்திலும், அரசாங்க தரப்பிலும், நல்ல இணக்கப்பாடு ஏற்படவேண்டும் - என்றார். (ம-14.இ)

# எரிபொருள் ஒத்துழைப்புக்காக சவூதிக்கு கொழும்பு அழைப்பு

கொழும்பு, செப். 3

சவூதி - இலங்கை இருநாட்டு எரிசக்தி பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் முகமாக சவூதி அரேபியாவுக்குச் சொந்தமான சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை இலங்கையில் அமைக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதியின் விசேட தூதுவராக ரியாத்துக்கு சென்று சவூதி அரேபிய பிரதி வெளிவிவகார அமைச்சர் வலீத் அல் குரைஜி மற்றும் அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி உட்பட சவூதி இராச்சியத்தின் அதிகாரிகளுடன் மேற்கொண்ட சந்திப்பிலேயே இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

நீண்டகால நிபந்தனைகளுடன் எரிவாயு மற்றும் கச்சா எண்ணெய் விநியோகம் உட்பட எரிசக்தி மற்றும் எரிபொருள் துறைகளில் சவூதி அரேபியாவுடன் நீண்டகால உறவுகளை உருவாக்கும் நோக்கில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன, மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி களப்பயணம்!

## கிழக்கில் ஓர் உதாரணம்




மட்டக்களப்பு, செப். 3

**சர்வ மதத்தலைவர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் இணைந்து, கிழக்கில் 'ஐக்கிய களப்பயணம்' என்ற தொனிப்பொருளில் திட்ட மொன்றை முன்னெடுத்துள்ளனர்.**

பல்லின சமூகத்தைச் சேர்ந்த அவர்கள் பல்சமய வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று வழிபாடு களை மேற்கொண்டும் இன ஐக்கியம், மத ஐக்கியம் தொடர்பில் விழிப்புணர்வை மேற்கொண்டும் வருகின்றனர்.

இந்தக் குழு இதுவரை காத்தான்குடி, சொறிக்கல்முனை, வீரமுனை, அம்பாறை மற்றும் புத்தளம் ஆகிய இடங்களிலுள்ள பள்ளிவாசல், கத்தோலிக்க தேவாலயங்கள், இந்து ஆலயங்கள் மற்றும் பௌத்த விகாரைகள் ஆகியவற்றுக்குச் சென்று பல்வேறு நல்லிணக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்தக் களப்பயணம் தொடர்பில் மெதடிஸ்த திருச்சபையின் அருட்தந்தை கே.ஜெகதாஸ் அடிகளார் தெரிவிக்கையில், ஒவ்வொரு சமயங்களினதும் பண்பாடுகள் அவர்களின் விழுமியங்களை கேட்டு அறிந்து கொள்ளும் நோக்குடனும், அனைவரும் ஒன்றிணைந்து மாவட்டத்திலும் நாட்டிலும் சமாதானத்துக்கான செயற்பாடுகளை மேற்கொள்ளும் வகையிலுமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார். (ம-14,60)





28 வருடங்களின் பின்னர்

## வயாவிளான் ஞானவைரவர் ஆலய மகாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செப். 3

யாழ்ப்பாணம் வயாவிளான் தெற்கு ஞான வைரவர் ஆலய மகாகும்பாபிஷேகம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

குறித்த ஆலயம் இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலய கட்டுப்பாட்டில் சுமார் 28 வருடங்களாக இருந்த நிலையில், பல்வேறு தரப்பினரின் தொடர் கோரிக்கைக்கமைய கடந்த 2018ஆம் ஆண்டு ஜூன் மாதம் விடுவிக்கப்பட்டது. இந்த நிலையில் முற்றாக சேதமடைந்த குறித்த ஆலயம் தற்போது மீள்நிர்மாணம் செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் பெருமளவான பக்தர்களுடன் மகா கும்பாபிஷேகம் இடம்பெற்றது. (ச-27)





வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நடைபெற்று வரும் நிலையில், நேற்றுமுன்தினம் இரவு தங்கரதத் திருவிழா சிறப்பாக இடம்பெற்றது. இதன்போது துர்க்காதேவி, விநாயகர், முருகப்பெருமான் ஆகிய தெய்வங்களுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்றன. குறித்த கடவுளர்கள் தங்கரதத்தில் உள்வீதி, வெளிவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். (ச-27)

## நாகேஸ்வரர் ஆலய வருடாந்த திருவிழா

யாழ்ப்பாணம், செப். 3

அனலைதீவு, புளியந்தீவு நாகேஸ்வரர் ஆலய வருடாந்தத் திருவிழா நேற்றுமுன்தினம் முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 9ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் 10ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. இந்த ஆலயத்தில் தினமும் நாக பாம்புப் பூசை மேற்கொள்ளப்பட்ட பூக்கள் நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்படுவது குறிப்பிடத்தக்கது. (ச-9)

## திருகோணமலையிலிருந்து சந்நிதிக்குப் பாதயாத்திரை

யாழ்ப்பாணம், செப். 3

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு, திருகோணமலை வெருகலம்பதி சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்திலிருந்து வேல்சாமி தலைமை தாங்கிய 30 பேர் கொண்ட குழுவினர் செல்வச்சந்நிதி ஆலயத்துக்குப் பாதயாத்திரை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த மாதம் 18ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட பாதயாத்திரை கடந்த புதன்கிழமை பரந்தன் முருகன் கோவிலையும், நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பளை கண்ணகியம்மன் ஆலயத்தையும் வந்தடைந்தது.

இந்தப் பாதயாத்திரை எதிர்வரும் 7ஆம் திகதி புதன்கிழமை செல்வச்சந்நிதி ஆலயத்தை வந்தடையவுள்ளது. (ம-14)



வவுனியா [illegible] ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது. இதன்போது பெருமளவிலான பக்தர்கள் கலந்துகொண்டதுடன், காவடி எடுத்தும், தீச்சட்டி ஏந்தியும் தங்களது நேர்த்திக்கடன்களை செலுத்தினர். (ய-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**நாளொரு நல்வார்த்தை**

"முடியாது என்ற வார்த்தை முட்டாள்களின் அகராதியில் மட்டுமே காணக்கூடிய ஒன்று"
- **மாவீரன் நெப்போலியன்**

## கைக்கு எட்டியது வாய்க்கு எட்டுமா?

சர்வதேச நாணய நிதியத்தின் முதற்கட்ட நிதி இலங்கைக்கு கிடைப்பது ஓரளவு உறுதியாகியிருக்கின்றது. ஆனாலும் அந்த நிதி முழுமையாகக் கிடைக்கவேண்டுமாக இருந்தால், இலங்கை இன்னும் பல கிணறுகளைத் தாண்டவேண்டும்.


சர்வதேச நாணய நிதியம் வழங்குவதற்கு இணங்கியுள்ள 2.9 பில்லியன் அமெரிக்க டொலரும் ஒரேயடியாக இலங்கைக்கு கிடைக்காது. 4 ஆண்டுகளுக்குள் அந்த நிதி பிரித்து, பங்கீட்டு அடிப்படையில்தான் வழங்கப்படும். அந்த 4 ஆண்டுகளுக்குள்ளும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை இலங்கை நிறைவேற்றியாகவேண்டும். அவற்றை நிறைவேற்றத் தவறுகின்ற பட்சத்தில் சர்வதேச நாணய நிதியத்துடனான உறவாடல் முடிவுக்கு வந்துவிடும். அதன் பின்னர் இலங்கையை மீட்பதென்பது உலகைப் படைத்த அந்தப் பிரமனாலும் முடியாத காரியம்.சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில், வரிவிதிப்பு, ஆட்குறைப்பு போன்ற மக்களை வதைக்கின்ற எல்லாவற்றையும் இலங்கை அரசாங்கமும், அரசியல்வாதிகளும் சர்வசாதாரணமாகச் செயற்படுத்துவார்கள். அதில் ஒன்றும் அவர்களுக்கு கவலையோ, தடங்கல்களோ இருக்காது.அவை அவர்களுக்கு நன்கு பழக்கப்பட்ட விடயங்களும் கூட. ஆனால் அரசியல்வாதிகளைக் கடுமையாகப் பாதிக்கின்ற , அரசாங்கம் செய்ய முடியாமல் திணறப்போகின்ற சில நிபந்தனைகளும் இருக்கத்தான் செய்கின்றன.

"பொது நிதி முகாமைத்துவத்தில் கூடிய கவனம் செலுத்தியாக வேண்டும். குறிப்பாக ஊழல் அற்ற வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குதல் அரசாங்கத்தின் கட்டாயப்பணியாக அமைய வேண்டும். அதற்கமைய உறுதியான ஊழல் தடுப்பு வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும். நிதி வெளிப்படைத்தன்மை மற்றும் பொது நிதி நிர்வாகத்தை மேம்படுத்துவதன் மூலம் ஊழல் பாதிப்புகளை குறைத்தல், வலுவான ஊழலுக்கு எதிரான சட்டக் கட்டமைப்பை அறிமுகப்படுத்துதல் என்பவற்றை இலங்கை செய்வதன் மூலமே இந்த 4 ஆண்டுகளுக்கும் உரிய நிதி பங்கிட்டு வழங்கப்படும்" என சர்வதேச நாணய நிதிய தூதுக்குழுவின் பிரதித் தலைவர் மசாஹிரோ நொசாக்கி தெரிவித்துள்ளார்.

இந்தவிடயங்கள்தான் இலங்கைக்கு சிக்கலாக இருக்கப் போகின்றன. இதுவரை காலமும் உள்ளக விசாரணை என்று ஐ.நா.வுக்கு போக்குக் காட்டுவதைப்போன்று இந்த நிபந்தனைகளை நிறைவேற்றாமல் 'பேய்க்காட்ட' முடியாது. ஐ.நா.வைப்போல இலங்கை சொல்வதையெல்லாம் சர்வதேச நாணயநிதியம் கண்ணைமூடிக்கொண்டு நம்பிவிடாது. தான் விதித்த நிபந்தனைகளை இலங்கை சரிவர நிறைவேற்றியிருக்கிறதா? என்பதை பலமுறை உறுதிப்படுத்திய பின்னர்தான் எஞ்சிய நிதியை நாணயநிதியம் விடுவிக்கும். அவ்வாறு செய்ய இலங்கை தவறியிருந்தாலோ அல்லது நிறைவேற்றிவிட்டதாக இலங்கை பம்மாத்து விட்டிருந்தாலோ கதை கந்தலாகிவிடும்.

நிதி வெளிப்படைத்தன்மை, ஊழல் ஒழிப்பு என்பன இலங்கை அரசியல்வாதிகளில் பலருக்கும், அரசாங்க அதிகாரிகளில் சிலருக்கும் ஒவ்வாத–ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாத –விடயங்கள்.எல்லாவற்றிலும் 'கொமிஷன்' – ஊழல் – இலஞ்சம் என்பதையே தமது வாடிக்கையாகக் கொண்டிருக்கும் அவர்களால் இதிலிருந்து விடுபட்டு வருவது என்பது அவ்வளவு எளிதில் நடக்கக்கூடிய விடயமல்ல. சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகள் காரணமாக, கடந்த காலங்களில் இவ்வாறு ஊழல் செய்தவர்கள் மீது அடுத்து ஆட்சிக்கு வரும் அரசாங்கம் வழக்குகளைத் தாக்கல் செய்வதும், மீண்டும் ஆட்சி மாறியதும் அவர்கள் மீதான வழக்குகளை மீளப்பெறுவதும் இனிச் சாத்தியமில்லாத விடயங்கள்.சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளால் இலங்கை மக்களுக்கு மாத்திரமன்றி அரசியல்வாதிகளுக்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும் சில பல ஆப்புக்கள் இறுக்கப்பட்டிருக்கின்றன.

கைக்கு எட்டிய சர்வதேச நாணய நிதியத்தின் உதவி வாய்க்கு எட்டுமா? இல்லையேல் வழமைபோன்று எல்லாவற்றையும் அரசியல்வாதிகள் கெடுத்துக் குட்டிச்சுவராக்கப் போகின்றார்களா?




# போராட்டக் களம் நீறுபூத்த நெருப்பு

## எதிர்காலத்தில் பற்றியெரியும் என்று சரத் பொன்சேகா எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, செப். 3**



**போராட்டங்கள் வெளியில் தெரியாவிட்டாலும் நீறுபூத்த நெருப்பைப் போன்று இருக்கின்றன. எதிர்காலத்தில் மீண்டும் வெளியில் தெரியும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்; 'நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் மக்களால் வாழ முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. உணவு, மருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது. போசணைக் குறைபாடு உள்ள நாடுகளில் இலங்கை 6 ஆம் இடத்துக்கு வந்துள்ளது.

பல்வேறு விடயங்களில் ஊழல், மோசடிகள் நடக்கின்றன. இந்த அரசு அந்த எண்ணத்தில் இருந்து விடுபடப் போவதில்லை. போராட்டம் காலிமுகத்திடலில் தெரியாவிட்டாலும் மக்களின் மனங்களில் உள்ளது. இதனால் தாக்குதல் நடத்தி, ஒடுக்குமுறைகளை முன்னெடுத்துப் போராட்டங்களை நிறுத்த முடியாது. போராட்டங்கள் சாம்பலுக்குள் உள்ள நெருப்பைப் போன்று எதிர்காலத்தில் வெளியில் வரும்.

அதற்குத் தேவையான பலத்தை நாங்கள் வழங்குவோம். போராட்டம் இன்றி வேறு எந்த முறையிலும் ஊழல் அரசியல்வாதிகளிடம் இருந்து நாட்டை மீட்க முடியாது. இதனால் போராட்டத்தைத் தொடர்ந்தும் கொண்டு செல்லவேண்டும் - என்றார். (ம-22)

# எகிப்தியத் தூதுவரை சந்தித்தார் அலி சப்ரி

கொழும்பு, செப். 3

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி - இலங்கைக்கான எகிப்தியத் தூதுவர் ஆகிய இருவரும் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

தற்போதைய பொருளாதார முன்னேற்றங்கள், நாடு எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் இந்த சவால்களை எதிர்கொள்வதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து தூதுவர் மொஸ்லேவுக்கு அமைச்சர் அலி சப்ரி விளக்கமளித்தார்.

தற்போதைய உலக முன்னேற்றங்கள் மற்றும் இரு நாடுகளுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. இலங்கைக்கும் எகிப்துக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை பலப்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. (ம)

**நாளை** 04.09.2022 ஞாயிற்றுக்கிழமை ஆவணி 19

சுபநேரம் : 09.05 - 10.35
ராகுகாலம்: 04.35 - 06.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புறு மணி விழாவில் மகிழ்வுறும் வாழ்த்துக்கள்



யா/ புங்குடுதீவு கமலாம்பிகை கனிஸ்ர மகா வித்தியாலயத்தின்
அதிபராக மிளிர்ந்து ஓய்வுபெறும்

## திருமதி சிவஞேஸ்வரி இராசரத்தினம்

அதிபர் SLPS - 2

அவர்களின் சேவையில் உயர்வு பெற்றோர்




**சேவை விரபம்**


கிளி/தம்பிராய் அ.த.க.பா. பூநகரி
29.08.1988 - 23.01.1991
யாழ்/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
24.01.1991 - 31.12.1992
கிளி/தம்பிராய் அ.த.க.பா. பூநகரி
01.01.1993 - 05.06.2011
யா/நயினாதீவு கணேச கனிஸ்ட ம.வி
06.06.2011 - 30.01.2012
யா/நயினாதீவு நாகபூசணி வித்தி.
31.01.2012 - 23.04.2014
யா/ நயினாதீவு ம.வி 24.04.2014 - 02.07.2015
யா/ புங்குடுதீவு கமலாம்பிகை கனிஸ்ர ம.வி.
03.07.2015 - 02.09.2022

இவரின் இன்றைய மணிவிழா நாளில் மனம் நிறைந்து வாழ்த்துவோர்.
ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்
பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள்

# நீங்கா நினைவில்...

30ஆம் ஆண்டு நினைவஞ்சலி

1ஆம் ஆண்டு நினைவஞ்சலி





**நாகலிங்கம் சேனாதிராஜா**

தோற்றம் 16.02.1934 — மறைவு 25.05.1992

**சேனாதிராஜா பாக்கியவதி**

தோற்றம் 31.08.1938 — மறைவு 13.09.2021

வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மோடு பயணித்த
எம் தெய்வங்களே
உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டு மறையாது

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

சைவ பாடசாலை வீதி,
திருநெல்வேலி.

[illegible]
குடும்பத்தினர்

(CS20591) (3/6)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
04 . 01 . 1948



ஆண்டவன் அடியில்
04 . 08 . 2022

## அமரர் இராசையா நடராஜசுந்தரம்

(களஞ்சிய உத்தியோகத்தர் - காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனம் )

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

பூவிதழின் மென்மையிலும் மென்மையான
புனிதமான அன்பு உள்ளத்தால் பாசத்தோடு எம்மை
அரவணைத்து அறிவூட்டி வாழ்வளித்த தந்தையே!
இருகரம் கூப்பித் தொழுகின்றோம் உம்மையே!
புன் சிரிப்பு தவழும் எங்களின் தெய்வ முகத்தை
இனி எப்போது நாங்கள் காண்போம்?
நீங்காத உங்களின் நினைவுகளுடன்
உங்கள் உயர்ந்த இலட்சியங்களை
எங்களின் நெஞ்சிலே சுமந்து
நாங்கள் உறுதியுடன் செல்லுவோம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!

களப்பிட்டி,
ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில்.

மனைவி, பிள்ளைகள்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமலாக்கப்பட்டோர் விவகாரம்;

# சர்வதேச விசாரணையை ஐ.நா.வில் வலியுறுத்துக!

## வேலன் சுவாமிகள் வலியுறுத்து



முல்லைத்தீவு, செப். 3

**வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது? என்பது தொடர்பில் சர்வதேச விசாரணைப் பொறிமுறை விரைவாக நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கை ஐக்கியநாடுகள் சபையின் 51ஆவது கூட்டத்தொடரில் முன்வைக்கப்படவேண்டும் - இவ்வாறு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை எழுச்சிப் பேரியக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்களுள் ஒருவரான வேலன் சுவாமிகள் வலியுறுத்தியுள்ளார்.**

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரால் புதுக்குடியிருப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த 13 வருடங்களாக தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று கேட்டு, வீதி வீதியாகப் போராடிய எமது தாய்மார்கள், உறவுகள் 138 பேருக்கும் மேற்பட்டவர்கள் இதுவரை உயிரிழந்துள்ளனர். ஆனால் இதுவரையில் எந்தவொரு நீதியுமே இதற்குக் கிடைக்கவில்லை. காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான விசாரணையில் சிறிலங்கா அரசில் எங்கள் எவருக்கும் எள்ளளவும் நம்பிக்கையில்லை. எனவே எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதற்கு சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும். அந்த சர்வதேச விசாரணை உரிய சாட்சியங்களை ஆவணப்படுத்துவதனூடாக சர்வதேசத்தினுடைய ஏற்பாட்டிலே, சர்வதேசத்தின் உத்தரவாதத்தினூடாக நடத்தப்படவேண்டும்.

இந்த சர்வதேச விசாரணைப் பொறிமுறையூடாக வலிந்து காணமலாக்கப்பட்ட உறவுகளுக்கான சர்வதேச நீதி கிடைக்கப்பெறவேண்டும். இதுவே எமது பிரதானமான கோரிக்கையாகும். அந்த வகையில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் 51 ஆவது கூட்டத்தொடரிலே இதற்கான ஏற்பாடுகளை அந்தக் கூட்டுரிமை நாடுகள் மேற்கொள்ளவேண்டும். அதிலும் பிரதானமாக 2009 ஆம் ஆண்டு இனப்படுகொலை, மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் ஆகியவற்றிலே ஈடுபட்டிருக்கக்கூடிய மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச உள்ளிட்ட அரச உயர்மட்டத் தரப்புக்கள், இராணுவ அதிகாரிகள், படைத்தளபதிகள் என அனைவருமே தனிநபர்களாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவேண்டும். அத்துடன் காலங்கடத்துகின்ற இந்த விவகாரத்தில் எங்களுடைய தமிழ் அரசியல் தலைவர்கள் யாருமே துணைபோகாது அனைவரும் ஓரணியாக, தமிழர்களாக அத்தனை மாவீரர்களுடைய தியாகங்களுக்கும், எமது தமிழ் மக்களின் அர்ப்பணிப்புக்கும் மதிப்புக் கொடுத்து அனைவரும் முன்னின்று செயற்படவேண்டும் - என்றார். (ம-14,246)

## அதிபர் சேவைக்கு விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி, செப். 3

தென்மராட்சி கல்வி வலயத்திலுள்ள சாவகச்சேரி சக்தி அம்மன் தமிழ்க் கலவன் பாடசாலையில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு, வடக்கு மாகாணத்தில் உள்ள இலங்கை அதிபர் சேவை தரம் III இனைச் சேர்ந்த அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தத்தமது வலயக் கல்வி அலுவலகங்களில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்திசெய்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார். (ச-9)

## இலவச அமரர் ஊர்திச்சேவை முல்லையில் முன்மாதிரி!


முல்லைத்தீவு, செப். 3

முல்லைத்தீவு மாவட்டத்தில் பொருண்மியம் நலிந்தவர்களுக்காக இலவசமான அமரர் ஊர்திசேவையொன்று கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. முள்ளியவளை தண்ணீரூற்றுப் பகுதியைச் சேர்ந்த அப்பாத்துரை புஸ்பராசாவின் நினைவாக அவரது மனைவி, பிள்ளைகள், மருமக்கள் ஆகியோரின் நிதி அனுசரணையில் புஸ்பராசா நற்பணி மன்றத்தால் அமரர் ஊர்தி சேவை கையளிக்கப்பட்டது. அத்துடன் பொருண்மியம் நலிந்த மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ம-14,19)

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 07 . 1931

மறைவு 30 . 08 . 2022



### வேலுப்பிள்ளை வாரித்தம்பி

**(முன்னாள் முள்ளியான் கிராமத்தலைவர்)**

சாவகச்சேரி புங்கங்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை வாரித்தம்பி அவர்கள் கடந்த (30.08.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வேலுப்பிள்ளை தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், திரு.திருமதி செல்லையா சின்னத்தங்கம் தம்பதியரின் ஆசை மருமகனும், காலஞ்சென்ற திருமதி இராஜலக்ஷ்மி அவர்களின் அன்புக் கணவரும், வேலாயுதம், சதானந்தன், தயாபரன், வளர்மதி, விமலேந்திரன், சாந்திமதி, சந்திரவதனா ஆகியோரின் தந்தையாரும் ரஜிதா, ராஜி, தர்சா, தேவராசா, சயந்தன், குமிதினி, சிறிபிரகாஷ் (உரிமையாளர் குகன் ஸ்ரூடியோ, சாவகச்சேரி), ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரியங்கா, திவ்வியா, கீர்த்தனா, மிதுன், மனோஜ், பவித்திரா, நிதர்சன், ரிஷானா, பிரீத்தி, பிரணவன், பானுகோபன், வைதேகி, அம்ருதா, சேருகன், வீணா, திலானா, துளசிகா, தாரணி, சங்கவி, ரமணா ஆகியோரின் பேரனும் லியம், கேற்றீ, டிலன், எய்டன்; மில்டன், வியங்கா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.09.2022) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு ஆரம்பித்து பிற்பகல் 4 மணிக்கு தகனத்திற்காக பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**புகையிரத நிலைய ஒழுங்கை, சாவகச்சேரி.**

**தகவல்: குடும்பத்தினர். 077 303 9450**

## மரண அறிவித்தல்

பிறப்பு 06 . 05 . 1936

இறப்பு 02 . 09 . 2022



### திரு.அரியரத்தினம் செல்வரத்தினம்

உரும்பிராயை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு.அரியரத்தினம் செல்வரத்தினம் அவர்கள் நேற்று (02.09.2022) வெள்ளிக்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியரத்தினம் குட்டிப்பிள்ளை தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தவமணி தம்பதியரின் அருமை மருமகனும் ரூபவதியின் (மணி) அன்புக் கணவரும், ஜெகதீஸ்வரன், ஜெயரூபி, ஜெயஆனந்தன், காலஞ்சென்ற ஜெயமோகன், ஜெயவாணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருஷ்ணதயாளி, ராஜ்குமார், பத்மலோயனி, வளர்மதி, விமலராஜ் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான இரத்தினம்மா, பாலசிங்கம் மற்றும் தனபாலசிங்கம், சிவகுருநாதன், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரனும் அர்ச்சனா, சாதனா, கஜானனன், சஞ்சே, சஞ்சீவன், ஜெனனி, சதுர்சியா, தனுயன், தினோயன், பிரித்திகா, தினுயன், சர்பிகா, வர்சனா, சனுாஷ் ஆகியோரின் பேரனும் அபிராமி, அஷ்வின், ஆதீசன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (04.09.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் நடைபெற்று உரும்பிராய் இளங்காட்டு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

மனைவி : 077 549 5279
மகன் : 0660816705
மகள் : 065 257 3226
மருமகள் : 0664991767
மகன் : 077 633 9468

**தகவல் : குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## திரு.மகேஸ்வரன் பார்த்தீபன்

எமது பாடசாலை உப அதிபர் திருமதி மைதிலி தேவராஜா வர்களின் அன்புச் சகோதரனும் சிறந்த சிற்ப கலைஞருமான அமரர் திரு. மகேஸ்வரன் பார்த்தீபன் அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காக வேண்டி நிற்கின்றோம்.

துயருடன்
பாடசாலைச் சமூகம்
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பு

தோற்றம் 20 . 03 . 1946



மறைவு 04 . 08 . 2022

கடந்த 04.08.2022 அன்று இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத்தலைவர்

## திரு. கோவிந்தபிள்ளை கோபாலசிங்கம்

(இளைப்பாறிய பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் -
யாழ். போதனா வைத்தியசாலை

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் இன்று (03.09.2022) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தயவுசெய்து இதை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

36/1A காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 322 2824

(CS 20604) (2.6)

# முதலாம் ஆண்டு நினைவில்

தோற்றம் 25 – 05 – 1939



மறைவு 14 – 09 – 2021

## திருமதி செல்வராசா பரிமளம்

எம் இதயமென்னும் கோயிலில்
தெய்வமாய் நிறைந்திட்ட அன்னையே
நம்ப முடியவில்லை ஓராண்டு கடந்ததை
ஆண்டுகள் பல ஆனாலும்
ஆறாது எம் துயரம் நீங்காது அம்மா
எம் மனதில் உங்கள் நினைவு
இன்னொரு பிறப்பு ஒன்று உண்டெனில்
உங்கள் பிள்ளைகளாக மட்டுமே
நாம் பிறந்திட வேண்டும் அம்மா!.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

தொடர்புகள்:
மகன் - 071 814 8413
மகள் - 077 805 7205

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 46308) (3/6)

# பெயர் மாற்றம்

துரையன் செம்பாடு, வல்வெட்டி,
வல்வெட்டித்துறையை வதிவிடமாக கொண்ட
**சதாசிவம் சதிஸ்வரராசா** என்ற
பெயரினை **சதாசிவம் சதீஸ்வரராஜா** என
மாற்றிக் கொள்வதோடு இன்றிலிருந்து சகல
ஆவணங்களிலும் அவ்வாறே கையொப்பம்
இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு
அமைவாக அறியத்தருகின்றேன்.

ச.சதீஸ்வரராஜா

# பணிப்பெண் தேவை


வீட்டுப் பணிப்பெண் தேவை
சம்பளம் நேரில் பேசி
தீர்மானிக்கப்படும்.

077 069 8105

(cs20509) (2.6)

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
09 - 04 - 1952



ஆண்டவன் மடியில்
30 - 08 - 2022

## போதகர் அன்ரன் தேவதாஸ்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த போதகர் அன்ரன் தேவதாஸ் அவர்கள் கடந்த (30.08.2022) காலை 7.45 மணியளவில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி நிக்கொலஸ் தேவதாஸ் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற திரு. திருமதி ஐசக் இராஜசூரியர் தம்பதியினரின் அன்பு மருமகனும்,திருமதி பிரேமரூபினி அன்ரன் அவர்களின் பாசமிகு கணவரும், ஐசக் யேசுநேசன் (Zambia), அன்ட்றூ தேவசேயன் (கொழும்பு), இவாஞ்சலா தேவப்பிரியா (டென்மார்க்), கெர்சோம் அருட்செல்வன் (கனடா) மற்றும் டெபோரா ஜெபசீலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் றொமேலா அன்ரன், டனி டானியேல் (டென்மார்க்), ஏஞ்சலின் அன்ரன் (கனடா) ஜேம்ஸ் ஜெபசீலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், டேவிட், டிசான், டெவினா, மிக்கேலா, நற்றானியா, நிரேயா மற்றும் ஐசாயா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது பூதவுடல் பார்வைக்கும் அஞ்சலிக்கும் வெள்ளிக்கிழமை முதல் கல்கிசை மகிந்த மலர்சாலையில் வைக்கப்பட்டு இறுதி ஆராதனை நாளை (04.09.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து நல்லடக்க நிகழ்வுகள் கல்கிசை பொது மயானத்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் :
**அன்ட்றூ சேயன் (மகன்)**
**0774817601**

(CS 20565) (3/6)

# என்றும் நெஞ்சை விட்டு நீங்காத நினைவலைகள்

27 ஆம் ஆண்டு

தோற்றம்
18.04.1907



மறைவு
02.09.1995

அமரர்
## ஆறுமுகம் கந்தையா

(இளைப்பாறிய தபால் அதிபர் - கோப்பாய்)
திதி: ஆவணி மாத பூர்வபட்ஷ அட்டமி
03.09.2022 வெள்ளிக்கிழமை

01 ஆம் ஆண்டு

தோற்றம்
16.09.1925



மறைவு
11.09.2021

திருமதி
## தெய்வநாயகி கந்தையா

திதி: பஞ்சமி 01.09.2022
வியாழக்கிழமை

அன்புடனும், பாசத்துடனும் எம்முடன் வாழ்ந்து நாம் சிறப்புடன் வாழவழிகாட்டி எம்மை எல்லாம் விட்டு மறைந்த எங்களின் அன்புத் தெய்வங்கள் அப்பா, அம்மாவே! ஆண்டுகள் பல ஓடிமறைந்தாலும் எங்களது இதயத்தில் உங்களது நினைவை நிறுத்தி உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

கைதடி தெற்கு, கைதடி.
க.துலராஜன்
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

என்றும் உங்களின் நினைவுகளில்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(cs.46318) (2.6)

# பூநகரி பிரதேசத்துக்கு குடிதண்ணீர் பவுஸர்:ஜப்பான் கையளிப்பு

கிளிநொச்சி பூநகரி பிரதேசசபைக்கு ஜப்பான் அரசாங்கத்தால் நீர்த்தாங்கி கையளிக்கப்பட்டுள்ளது. பூநகரி பிரதேசசபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் இதுகுறித்து தெரிவிக்கையில், குடிதண்ணீர் பெறுவதில் பெரும் சிரங்களை எதிர்கொண்டுள்ள எமது பிரதேச மக்களின் குடிதண்ணீர் தேவையை நிறைவேற்றுமுகமாக ஜப்பான் அரசாங்கத்தால் அதிதிறன் கொண்ட குடிதண்ணீர் பவுஸர் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த பவுஸர் மூலம் பிரதேச தொலை தூர கிராமங்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்படவுள்ளது - என்றார். (ச-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பன் வீட்டில் திருட்டு: சந்தேகநபருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், செப். 3

நண்பனின் வீட்டில் நான்கரைப் பவுண் நகையைத் திருடினார் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பூம்புகார் பகுதியில் வசிக்கும் ஒருவரின் வீட்டுக்கு பருத்தித்துறையில் இருந்து வருகை தந்த நண்பர் தங்கி நின்று சென்றுள்ளார். அதன்பின்னர் வீட்டிலிருந்து நான்கரைப் பவுண் நகை திருடப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை ஆரம்பித்த யாழ்ப்பாணப் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய, பருத்தித்துறை நகைக் கடையொன்றில் நான்கரைப் பவுண் நகையை உருக்கி விற்பனை செய்த குற்றச்சாட்டில் கடந்த புதன்கிழமை குறித்த நபரைக் கைது செய்தனர்.

அதனையடுத்து சந்தேகநபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முற்படுத்தியபோதே, அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ம-14-125)

# கஞ்சாவுடன் கைது: நபருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், செப். 3

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொம்மைவெளிப் பகுதியில் கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்ட நபரொருவர் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொம்மைவெளிப் பகுதியில் கஞ்சாவை உடைமையில் கொண்டு செல்வதாக யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கு அமைய, நயினாதீவைச் சேர்ந்த 32 வயதான ஒருவர் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டார். அத்துடன் அவரிடமிருந்து 8 கிலோகிராம் கஞ்சாவும் பொலிஸாரால் மீட்கப்பட்டது.


அதனையடுத்து சந்தேகநபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ம-14-125)

# துணுக்காய் வலயத்தில் பல்வேறு குறைபாடுகள்!

## மாணவர்களுக்கு உதவி தேவை என்று வலயக்கல்விப் பணிப்பாளர் கோரிக்கை

**முல்லைத்தீவு, செப். 3**

**துணுக்காய் கல்வி வலய பாடசாலையிலுள்ள மாணவர்களின் பல்வேறுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய அனைவரும் முன்வர வேண்டும் என்று துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் மாலினி முகுந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



ஒலுமடு தமிழ் வித்தியாலயத்தில் மாணவர்களின் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக நோர்வே அரசாங்கத்தின் 4 லட்சம் ரூபா நிதியுதவியிலும், நோர்வே பொருண்மிய மதியுரையகத்தின் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியுதவியிலும் அமைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் இயந்திரம் நேற்றுமுன்தினம் மாணவர்களின் பாவனைக்கு வழங்கப்பட்டது. அந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுடைய கல்வி அமைச்சின் நிதியில் எங்களுடைய மாணவர்களுக்கான அனைத்து வசதிகளையும் செய்யக்கூடிய நிலை எங்களிடம் இல்லை. ஆனால் துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கு பல்வேறு தேவைகள் உள்ளன. போக்குவரத்து, பாடசாலைகளுக்கான கட்டடங்கள், குடிதண்ணீர் வசதி போன்ற பல்வேறு தேவைகள் உள்ளன. அதுமட்டுமன்றி எமது மாணவர்களுடைய குடும்பங்களின் பொருளாதார நிலையும் சீராக இல்லை. எனவே அந்தந்த மாணவர்களுடைய குடும்பங்களுக்கு நிரந்தரமான நிதித்திட்டத்தை வழங்குவதற்கு நாம் கவனமெடுப்பதோடு ஏனையவர்களும் முன்வர வேண்டும் -என்றார். (ம-14-19)

# நீதிமன்றில் முற்படுத்தியபோது தப்பிச்சென்ற சந்தேகநபர்கள்!

## ஒருவர் மீண்டும் கைது

சாவகச்சேரி, செப். 3

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட இரு சந்தேகநபர்கள் தப்பியோடிய நிலையில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மற்றையவர் தலைமறைவாகியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச் சாட்டில் கைதுசெய்யப்பட்ட இரு சந்தேகநபர்கள் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். நீதிமன்ற வளாகத்தில் சிறைக்காவலர்களின் பாதுகாப்பில் இருந்த குறித்த இருவரும் தப்பியோடியபோது அவர்களை பொலிஸார் மற்றும் சிறைக்காவலர்கள் துரத்திச் சென்றபோது ஒருவர் கைதுசெய்யப்பட்டார். மற்றவர் தப்பிச் சென்றுள்ளார். தப்பிச் சென்றவரை கைதுசெய்யும் நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-27)

### கிளிநொச்சி நகரசபை விவகாரம்

# கலந்துரையாடல்களை மேற்கொண்டு எல்லைகளை வரையறுக்கவேண்டும்!

## தமிழ் மக்கள் கூட்டணி வலியுறுத்து

கிளிநொச்சி, செப். 3

கிளிநொச்சி நகரசபை எல்லை வரையறையை மீள்பரிசீலனை செய்து, மக்களின் அபிப்பிராயங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என தமிழ் மக்கள் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் க. அருந்தவபாலன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

கிளிநொச்சி பிரதேசசபை முன்மொழிவுக்கமைய தற்போது நகரசபையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.


இதன்மூலம் நிலையான அபிவிருத்தியை நோக்கி கிளிநொச்சி நகரை முன்னகர்த்தும் செயற்பாடு மேற்கொள்ளப்படும். இந்த நிலையில் முன்மொழியப்பட்டுள்ள கிளிநொச்சி நகரசபை எல்லை வரையறை தொடர்பில் ஒரு பகுதி மக்கள் தமது கவலையையும் ஆட்சேபனைகளையும் தெரிவித்துள்ளனர்.

நகரத்தை அண்மித்துள்ள சில பகுதிகள் வேண்டுமென்றே எல்லை வரையறைக்குள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இங்கு தென்னிலங்கையிலும் மலைநாட்டிலிருந்தும் வந்து குடியேறிய மக்கள் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். மேலும் எல்லைகள் வரையறுக்கப்பட்டபோது மக்களுடனோ அங்குள்ள பொது அமைப்புகளுடனோ எவ்வித கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

எனவே மக்கள் மத்தியில் நிரந்தரமான பிரிவை உருவாக்கக்கூடிய, எவருடனும் கலந்தாலோசிக்கப்படாத நகரசபை உருவாக்கும் முயற்சியை மீள்வரையறை செய்து பொருத்தமான பொறிமுறையூடாக கிளிநொச்சியை நகரசபையாக்குவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் -என்றார். (ச-இ)

# சீரமைப்பின்றி யாழ். தொண்டைமானாறு வீதி

## மக்கள் விசனம்



யாழ்ப்பாணம், செப். 3

யாழ்ப்பாணம்-தொண்டைமானாறு பிரதான வீதி இன்னமும் சீரமைப்புச் செய்யப்படாததால் தற்போது பெய்த மழை காரணமாக குண்டும் குழியும் ஏற்பட்டு இவ்வீதியூடாகப் பயணிக்க முடியாத நிலையேற்பட்டுள்ளது என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த பெருந்திருவிழா தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

ஆலயத்துக்கு வருகைதரும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் இந்த வீதியையே பயன்படுத்துகின்றனர்.

அத்துடன் உழவியந்திரங்கள் மூலம் காவடி எடுத்து நேர்த்திக் கடன் செலுத்தும் பக்தர்கள் குறித்த வீதியை பயன்படுத்தும் போது பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். ஆகவே கடந்தபல வருடங்களாக புனரமைப்பின்றிக் காணப்படும் குறித்த வீதியை உடன் புனரமைக்க உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் -என்றனர். (ச-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி நகரசபையால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

சாவகச்சேரி, செப். 3

சாவகச்சேரி நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்றுமுன்தினம் முதல் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என்று தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்துள்ளார்.


நாளை 4ஆம் திகதிவரை இரவு வேளைகளில் விழிப்புணர்வு அறிவிப்புக்கள் வட்டார ரீதியில் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாளை மறுதினம் 5ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதிவரை டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை இனங்கண்டு அழிக்கும் வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. வட்டார ரீதியில் அறிவிக்கப்பட்டதன்படி, வரியிருப்பாளர்கள் தங்கள் குடியிருப்புக்கள் மற்றும் காணிகளில் காணப்படும் நீரேந்து பொருள்களைச் சேகரித்து கழிவகற்றும் வாகனத்தில் கையளிக்க முடியும்.

எதிர்வரும் 12ஆம் திகதி முதல் அனைத்து வட்டாரங்களிலும் திடீர் களத்தரிசிப்புக்கள் மேற்கொள்ளப்படும் என்றும், டெங்கு குடம்பிகள் இனங்காணப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5ஆம் திகதி கோயிற்குடியிருப்பு, சங்கத்தானை வட்டாரங்களிலும், 6ஆம் திகதி சாவகச்சேரி வடக்கு, மண்டுவில் வட்டாரங்களிலும், 7ஆம் திகதி சாவகச்சேரி நகரம், நுணாவில் கிழக்கு வட்டாரங்களிலும், 8ஆம் திகதி நுணாவில் மத்தி, நுணாவில் மேற்கு வட்டாரங்களிலும், 9ஆம் திகதி கல்வயல், மீசாலை மேற்கு வட்டாரங்களிலும், 10ஆம் திகதி மீசாலை கிழக்கு வட்டாரத்திலும், 11ஆம் திகதி நகரப் பகுதியிலும் உள்ள அனைத்து வடிகால்களும் துப்புரவு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## விமானம் தாங்கி கப்பலை தயாரித்தது இந்தியா !



புதுடில்லி, செப். 3

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் விமானம் தாங்கி போர்க்கப்பலான 'ஐ.என்.எஸ். விக்ராந்த்', பிரதமர் நரேந்திர மோடியால் இந்தியக் கடற்படையிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது. கொச்சி கப்பல் கட்டும் தளத்தில் வைத்து பிரதமர் மோடியால் இந்த கப்பல் கையளிக்கப்பட்டுள்ளது.

இது இந்திய மதிப்பில் 20 ஆயிரம் கோடி ரூபா செலவில் கட்டப்பட்டுள்ளது. 30 விமானங்கள் வரையில் ஒரே நேரத்தில் தாங்கிச் செல்லக் கூடியது. உள்நாட்டு தொழில்நுட்பத்தை மட்டும் பயன்படுத்தி மிகப்பெரிய விமானம் தாங்கிக் கப்பல்களை வடிவமைத்த நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் சேர்ந்துள்ளது.

இது இந்தியாவின் இரண்டாவது விமானம் தாங்கி போர்க்கப்பல் ஆகும். ஏற்கனவே இந்தியாவிடம் உள்ள விமானம் தாங்கி போர்க்கப்பலான 'ஐ.என்.எஸ் விக்கிரமாதித்யா' ரஷ்யாவிடமிருந்து பெறப்பட்டதாகும். (அ-ஒ-இ)

## சுத்திகரிப்பு தண்ணீரைத் தவிர்த்து கொதித்தாறிய தண்ணீரை பருகுக

*சாவ. சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்து*

சாவகச்சேரி, செப். 3

சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் பாவனையைத் தவிர்த்து கொதித்தாறிய நீரைப் பருகுமாறு சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக சுத்திக ரிக்கப்பட்ட குடிதண்ணீர் வீடு வீடாகச் சென்று விற்பனை செய்யப்படுகின்றது.

குடிதண்ணீர் சுத்திகரிக்கப் படும் போது அதில் காணப்படும் கனியுப்பு, மகனீசியம் போன்றவை மற்றும் கல்சியம் ஆகியவை இழக்கப்படுகின்றன.

இவை உடலின் தொழில்பாட்டுக்கு அவசியமானதாகும். இவை இல்லாதுவிடின் காலப் போக்கில் எலும்புகளில் கல்சியம் குறைவடைந்து தேய்வு மற்றும் முறிவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஆகவே சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீரைக் கொள்வனவு செய்வதைத் தவிர்த்து வீடுகளில் கொதித்தாறிய நீரைப் பருகுவதன் மூலம் நுண்கிருமிகள் தவிர்க்கப்படுவதுடன் ஆரோக்கியத்தையும் மேம்படுத்தலாம் என சுகாதாரத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-9)

## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கி வரும் தனியார் நிறுவனத்திற்கு பின்வரும் பதவி நிலைகளுக்கு வேலையாட்கள் தேவை. (ஆண், பெண்)

1. **Account Assistant**
(கணினி அறிவுடைய கணக்கு உதவியாளர்)
2. **Designer**
(Photoshop, Corel draw செய்யக்கூடியவர்கள்)

வருகின்ற 5,6 ம் திகதிகளுக்கு முன் தொடர்புகொள்ளவும் **076 137 9330**

## நுணாவில் சிறுவர் பூங்காவுக்கு உதவி செய்யுமாறு கோரிக்கை

சாவகச்சேரி, செப். 3

சாவகச்சேரி நகரசபையால் நுணாவிலில் அமைக்கப்படவுள்ள சிறுவர் பூங்காவுக்குத் தேவையான உபகரணங்கள், மிருகங்களின் சிலைகள் போன்றவற்றை அன்பளிப்பாக வழங்கி உதவுமாறு உள்ளூர் மற்றும் வெளியூர் நன்கொடையாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன்.

சிறுவர் பூங்கா அமைக்க நுணாவில் பகுதியில் 20 பரப்புக்காணி நகரசபையால் கொள்வனவு செய்யப்பட்டு அதன் ஆரம்பகட்ட நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் பூங்காவில் சிறுவர் விளையாட்டு முற்றத்துக்குரிய உபகரணங்கள் மற்றும் சிறுவர்களை மகிழ்விக்கக்கூடிய மிருகங்களின் உருவச்சிலைகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்யக்கூடிய நிதிவளம் சபையிடம் இல்லாததால் உள்ளூர் மற்றும் வெளியூர் நன்கொடையாளர்களிடமிருந்து அன்பளிப்பாக உதவி கோரப்பட்டுள்ளது.

இதேவேளை நன்கொடையாளர்களால் வழங்கப்படும் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் மிருகங்களின் சிலைகளை வைப்பதற்குரிய இடங்களைக் குறிப்பிடும் வரைபடம் ஒன்றையும் வழங்கி உதவுமாறும் தவிசாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-14,9)

## கால்நடைகளுக்கான நீர்த்தொட்டி அமைப்பு

யாழ்ப்பாணம், செப். 3

புங்குடுதீவு - குறிச்சிக்காடு பகுதியில், புங்குடுதீவு கிராமசபை மற்றும் புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் என்பவற்றின் முன்னாள் தலைவரான அமரர் சுப்பிரமணியம் கருணாகரன் நினைவாக அவரது குடும்பத்தினரின் ரூ.85 ஆயிரம் நிதியுதவியில் சூழலியல் மேம்பாட்டு அமைவனத்தின் (சூழகம்) ஏற்பாட்டில் கால்நடைகளுக்கு தண்ணீர் தொட்டியொன்று அமைக்கப்பட்டுள்ளது. (ய)



## மரண அறிவித்தல்

தோற்றம் 07 - 10 - 1947



மறைவு 02 - 09 - 2022

**செல்வரத்தினம் சத்தியராணி**

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் சத்தியராணி நேற்று (02.09.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுப்பிள்ளை இளையபிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும் சசிதரன் (சுவிஸ்), சசிச்செல்வி (சுவிஸ்), சசிகுமார் (ஆசிரியர், யா/கட்டுவன்புலம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், துஸ்யந்தினி (சுவிஸ்), ஜெயபவன் (சுவிஸ்), கவிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், சதுசினி (சுவிஸ்), சதுஷ் (சுவிஸ்), ஜெனிஷா (சுவிஸ்), ஜானுசன் (சுவிஸ்), ஜெருஷா (சுவிஸ்), மதுஷாயினி (மாணவி, யா/வேம்படி மகளிர் கல்லூரி), கம்ஸ்ஸாயினி (மாணவி, யாழ்/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.09.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

077 724 2580

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசூரினா கடற்கரை கட்டணம் மாற்றம்

யாழ்ப்பாணம், செப். 3
காரைநகர் பிரதேசசபையின் ஆளு
கைக்கு உட்பட்ட கசூரினா உல்லாசக்
கடற்கரையின் நுழைவுக் கட்டணத்
தில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்
ளது.
பிரதேசசபையின் மாதாந்த அமர்வு
தவிசாளர் க.பாலசந்திரன் தலைமை
யில் கடந்த 31ஆம் திகதி இடம்பெற்
றது.
இதன்போது கடற்கரைக்கு வாகனங்
களில் வரும் நபர்களுக்கான கட்ட
ணம் நீக்கப்பட்டு, வாகனங்களுக்கு
கட்டணம் அதிகரிக்கப்படலாம் என்ற
தீர்மானத்தை தவிசாளர் சபையில்
முன்வைத்தார். அந்தத் தீர்மானம்
ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.
மேலும் கடற்கரையை இரவு 9 மணி
வரை சுற்றுலாவிகளுக்காக திறப்ப
தற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
(அ-ஒ-125)

## 6 'கரண்டிகள்'...

42 ஆயிரம் ரூபா செலவில் வெள்ளி
கலந்த 6 கரண்டிகள் கொள்வனவு
செய்யப்பட்டுள்ளதாக பணியகத்தின்
உள்ளகத் தகவல்கள் தெரிவிக்
கின்றன.
அதிகாரி சாப்பிடும் போது பயன்படுத்
தும் கரண்டிகள் பழையதாக இருப்ப
தால், புதிய கரண்டிகளை வாங்க
உத்தரவிட்டுள்ளார்.
அதன்படி, பத்தரமுல்லையில் உள்ள
வர்த்தக நிலையத்திலிருந்து 5 ஆயி
ரம் ரூபாவுக்கு ஆறு கரண்டிகள்
கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
அவற்றை பரிசோதித்த சம்பந்தப்பட்ட
அதிகாரி, அது எதிர்பார்த்த நிலையில்
இல்லாத காரணத்தால் தரமான
கரண்டிகளை கொண்டு வருமாறு
பணித்துள்ளார்.
பின்னர், வெள்ளி கலந்ததாக கூறப்
படும் ஆறு கரண்டிகளைக் கொள்வ
னவு செய்துள்ளனர். அதன் பெறுமதி
42 ஆயிரம் ரூபா ஆகும்.
(அ-ஒ-இ)

## பட்ஜெட்...

அநுரகுமார திஸாநாயக்க தலைமை
யிலான ஜே.வி.பி.யின் மூன்று உறுப்
பினர்களும், கஜேந்திரகுமார் பொன்
னம்பலம் தலைமையிலான தமிழ்த்
தேசிய மக்கள் முன்னணியின் இரண்டு
உறுப்பினர்களும் வரவு - செலவுத்
திட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர்.
இதேவேளை, வாக்கெடுப்பைப் பிர
தான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள்
சக்தியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்
பும் புறக்கணித்திருந்தன.
மேலும், கடந்த புதன்கிழமை எதிரணி
வரிசைக்கு வந்து சுயாதீனமாகச்
செயற்படத் தீர்மானித்த ஜி.எல்.பீரிஸ்,
டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட 13 நாடா
ளுமன்ற உறுப்பினர்களும் இடைக்
கால வரவு - செலவுத்திட்டம் மீதான
வாக்கெடுப்பைப்புறக்கணித்திருந்தனர்.
தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின்
நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்
னேஸ்வரன் நாடாளுமன்ற அமர்வுக
ளில் நேற்றுப் பங்கேற்கவில்லை.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிதி
அமைச்சர் என்ற வகையில், எதிர்வரும்
நான்கு மாதங்களுக்கான இடைக்
கால வரவு - செலவுத் திட்டத்தை,
அமைச்சரவை அனுமதியுடன் கடந்த
30ஆம் திகதி நாடாளுமன்றத்தில்
சமர்ப்பித்து உரையாற்றியிருந்தார்.
இந்நிலையில், நிதி அமைச்சரின்
இடைக்கால வரவு - செலவுத் திட்டம்
மீதான விவாதம் கடந்த 31ஆம் திகதி
யிலிருந்து நேற்று வரை மூன்று நாள்
கள் இடம்பெற்றிருந்தன. அதற்க
மைய, இடைக்கால வரவு - செலவுத்
திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான
வாக்கெடுப்பு நேற்று மாலை 5.28
மணியளவில் ஆரம்பமானது.
இதன்போதே 115 மேலதிக வாக்குக
ளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.
ஜனாதிபதித் தெரிவின்போது ரணில்
விக்கிரமசிங்கவுக்கு 134பேர் வாக்க
ளித்திருந்தனர் . எனினும் அவரால்
முன்வைக்கப்பட்ட வரவு-செலவுத்திட்
டத்துக்கு 120 வாக்குகளே கிடைத்தன
என்பது குறிப்பிடத்தக்கது.
(அ-ஒ-22)

## பொலிஸில்...

யில் மருத்துவமனைக்கு கொண்டு
செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.
பரமேந்திரம் ரஜீவ்குமார் (வயது - 67)
என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்
ளார்.
அராலிப் பகுதிக்கு கனடாவிலிருந்து
விடுமுறையில் ஒரு தம்பதியர் வந்தி
ருந்தனர். இதன்போது அவர்களுக்கி
டையே குடும்ப முரண்பாடு எழுந்தது.
இந்தநிலையில் கனடாவில் இருந்த
வந்த பெண்ணின் தந்தையார்
கொழும்பிலிருந்து வருகை தந்து
,வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்
தில் தனது மகள் சார்பாக நேற்றுமுன்
தினம் மேற்கொண்டார்.
இந்த நிலையில் குடும்ப முரண்பாடு
சுமுகமாகத் தீர்க்கப்பட்ட நிலையில்
தனது மகள் மற்றும் மருமகனுடன்
கொழும்புக்குச் செல்லவிருப்பதாக
தெரிவித்து குறித்த பெண்ணின்
தந்தை முறைப்பாட்டை மீளப்பெறு
வதற்காக பொலிஸ் நிலையத்துக்குச்
சென்றபோது, அங்கு மயங்கி வீழ்ந்
துள்ளார்.
உடனடியாக 1990 அம்புலன்ஸ்
ஊடாக மருத்துவமனைக்கு கொண்டு
செல்லப்பட்டபோதும், அவர் இடை
நடுவில் உயிரிழந்தாரெனப் பொலி
ஸார் தெரிவிக்கின்றனர். (அ-ஒ-125)

## இடமாற்ற...

கொள்ளப்படமாட்டாது என்று கொழும்பு
அரசின் கல்வி அமைச்சு தெரிவித்
துள்ளது.
எனினும் கர்ப்பிணி ஆசிரியைக
ளுக்கு, மருத்துவ அறிக்கையில்
உறுதிப்படும் சுகாதாரக் காரணங்க
ளின் அடிப்படையில், வழங்கப்படும்
பாடசாலைகளின் சேவை அவசிய
தன்மையை அடிப்படையாக
கொண்ட ஆசிரியர்கள் மாத்திரம் இட
மாற்றங்களை பெற்றுக் கொள்ள
முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.
போக்குவரத்து பிரச்சினை காரண
மாக ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டி
ருந்த தற்காலிக இணைப்பு கடந்த
31ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்பட
விருந்தது. இந்தநிலையில் அந்தந்த
பாடசாலைகளின் அதிபர்களது
இணக்கப்பாடு இருந்தால் மாத்தி
ரமே, ஆசிரியர்கள் குறித்த பாடசா
லைகளில் எதிர்வரும் டிசம்பர் 31ஆம்
திகதி வரை சேவையில் ஈடுபட முடியும்
எனவும் கல்வி அமைச்சு தெரிவித்
துள்ளது. (அ-ஒ-இ)

## மாகாண....

9 மாகாணங்களினதும் சுகாதார
சேவைகள் பணிப்பாளர்களாக சிங்க
ளவர்களே உள்ளனர்.
வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பா
ளராக கடமையாற்றிய மூத்த மருத்
துவ நிர்வாக சேவை அதிகாரியான
மருத்துவர் கலாநிதி அ.கேதீஸ்வரன்,
யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய சுகா
தார சேவைகள் பணிப்பாளராக இந்த
ஆண்டு ஆரம்பத்தில் கடமைகளைப்
பொறுப்பேற்றார். அத்துடன் மாகாண
சுகாதார சேவைகள் பணிப்பாளராக
வும் பதில் கடமையாற்றி வருகிறார்.
வடக்கு மாகாண சுகாதார சேவைகள்
பணிப்பாளராகுவதற்குரிய தகுதிகளு
டன் மாகாண சுகாதார சேவையில்
மருத்துவர் நந்தகுமார் காணப்படு
கின்றார். அத்துடன் தற்போது நியம
னம் செய்யப்பட்டுள்ள மருத்துவர்
திலிப் லியனகேயைவிட மூப்பு நிலை
யில், மன்னார் மாவட்ட பிராந்திய
சுகாதார சேவைகள் பணிப்பாளர்
மருத்துவர் வினோதன், முல்லைத்தீவு
மாவட்ட பிராந்திய சுகாதார சேவை
கள் பணிப்பாளர் மருத்துவர் உமாசங்
கர் ஆகியோர் உள்ளனர்.
இவை எல்லாவற்றுக்கும் மேலாக
தற்போது நியமனம் செய்யப்பட்டுள்ள
மருத்துவத் திலிப் லியனகே, பிரதி
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்
பாளராக கடமையாற்றவே தகுதி
வாய்ந்தவர் எனவும், அவரது தகுதி
நிலைக்கு மீறி வடக்கிலுள்ள அதிகா
ரிகளின் மூப்புக்கள் புறக்கணிக்கப்
பட்டு இந்த நியமனம் கொழும்பு சுகா
தார அமைச்சால் தன்னிச்சையாக
மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும்
அறியமுடிகின்றது.
கிளிநொச்சி மாவட்ட மருத்துவம
னைப் பணிப்பாளராக திலிப் லிய
னகே கடந்த காலங்களில் பணியாற்
றியுள்ளார். இவர் அந்தக் காலப் பகு
தியில் மருத்துவமனைக்கு வருகை
தந்த நாள்கள் குறைவு என்று சுகாதா
ரத் திணைக்கள வட்டாரங்கள் தெரி
வித்தன. (அ-ஒ-5-214)

## அறுபதோடு...

உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க
தெரிவித்துள்ளார்.
60 வயதுக்கு மேற்பட்ட அரசியல்வா
திகள் தம்மை , மஹாதீர் முகமட்
அல்லது லீ குவான் யூ போன்றவர்
கள் போல நினைத்து வேலை செய்ய
வேண்டாம் என்றும் அவர் கேட்டுக்
கொண்டார்.
நாடாளுமன்றத்தில் நேற்று உரை
யாற்றுகையிலேயே மேற்கண்டவாறு
கூறினார். (அ-ஒ-இ)

## நினைவேந்தல்...

யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில்
அமைந்துள்ள இலங்கைத் தமிழ்
அரசுக் கட்சியின் பணிமனையில்
நேற்று மாலை இந்த நிகழ்வு நடை
பெற்றது.
இரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்
பினர்களின் திருவுருவப்படத்துக்கும்
மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.
இதன்போது நினைவுப்பேருரையும்
முன்னெடுக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளு
மன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்,
கட்சியின் பொருளாளர் பொ.கனசபா
பதி, நிர்வாகச் செயலர் சே.குலநாய
கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்ட
னர்.
இதேவேளை, முன்னாள் நாடாளு
மன்ற உறுப்பினர் தர்மலிங்கத்தின்
நினைவுதினம் அவர் உயிரிழந்த
தாவடியில் நேற்றுக் காலை நினைவு
கூரப்பட்டது. அவரது மகனும், நாடா
ளுமன்ற உறுப்பினருமான த.சித்
தார்த்தன் தலைமையில் இந்த
நிகழ்வு நடைபெற்றது.
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின்
தலைவர் மாவை.சோ.சேனாதிராசா,
அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞா
னம் ஆகியோர் கலந்து கொண்ட
னர். (அ-ஒ-20-125)

## லிட்ரோ...

பவர்கள் டொலரைச் செலுத்தி இலங்
கையில் பதிவு செய்து தமது நண்பர்
கள் உறவினர்களுக்கு வழங்க முடி
யும். இதற்கான கட்டணம் 15 டொலர்.
இதன்மூலம் நிறுவனத்துக்குத்
தேவையான டொலரைக் கையிருப்
பில் வைத்திருக்க முடியும் என்று
அவர் மேலும் கூறினார். (அ-ஒ-இ)

## டொலரின்...

பெறப்படும் டொலர் மற்றும் நிதி அதி
கரிப்பால், ஒரு அமெரிக்க டொலரின்
கொள்வனவு 300 ரூபாவாகக் குறை
வடையும் என்று வெளிவிவகார
அமைச்சர் அலி சப்ரி நம்பிக்கை
வெளியிட்டுள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று உரை
யாற்றுகையிலேயே மேற்கண்டவாறு
அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-இ)

## மின்வெட்டு...

நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக
இலங்கை பொதுப்பயன்பாடுகள்
ஆணைக்குழு அறிவித்துள்ளது.
(அ-ஒ-இ)

## நேற்று...

கடந்த ஜூலை மாதம் 13ஆம் திகதி
அதிகாலைவேளை நாட்டிலிருந்து
தப்பியோடிய கோத்தாபய ராஜபக்ச
நேற்று நள்ளிரவுவேளையில் நாடு
திரும்பினார்.
அவருக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்
பட்டுள்ள நிலையில் நாடு திரும்பி
யுள்ளார். (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருண்மியம் நலிந்தோருக்கே அரசாங்கத்தின் உதவி தேவை

*அரசியல் ஆதாயம் வேண்டாம் என்று மனோ கணேசன் எம்.பி. சுட்டிக்காட்டு*

**கொழும்பு, செப். 3**

**பொருண்மியம் நலிந்தவர்களுக்கு வழங்கும் கொடுப்பனவுப் பட்டியலில் தோட்டத்தொழிலாளர்கள், பாமர மக்கள் உள்ளிட்ட அனைவரும் இந்தக் கொடுப்பனவுப் பட்டியலில் உள்வாங்கப்பட வேண்டும் - இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இடைக்கால பாதீடு விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சமூக நலன்புரி பதிவகம் ஒன்றை தாபிக்க தரவு சேகரிப்பு இப்போது நடைபெறுகிறது. பக்க சார்பற்ற ஊர்ஜிதப்படுத்தக்கூடிய அளவுகோல்கள் மூலம் பயனாளிகளை அடையாளம் காணும் புதிய பொறிமுறை தாபிக்கப்படுகிறது. இது நல்லது. நான் ஒருபோதும் இலவச கொடுப்பனவுகள் வழங்கும் கொள்கையை ஆதரிப்பவன் அல்ல. ஆனால் 1948ஆம் ஆண்டிலிருந்தே அனைத்துத் திருடர்களும் சேர்ந்து இந்த நாட்டை நாசமாக்கி விட்டார்கள். இதனால், நாட்டில் வாழும் குறை வருமானம் கொண்ட பிரிவினர் துன்பத்தில் உழல்கின்றனர்.

இந்த நிலையில் கொடுப்பனவுகளை, உதவிகளை, பயனாளிகளைத் தெரிவுசெய்வது என்ற முறை யில் உள்ள அரசியல் ஊழலை ஜனாதிபதி தெரிந்து கொண்டுள்ளார் என நான் நம்புகிறேன்.

சமுர்த்தியாக இருக்கலாம், வேறு கொடுப்பனவுகளாக இருக்கலாம். இவற்றைப் பெறும் பயனாளிகள் பலர் வசதி உள்ளவர்கள், அதாவது உதவி பெற தகைமை இல்லாதோர் கணிசமாக இருக்கிறார்கள். அதேவேளை உதவி பெறவேண்டிய குறை வருமானம் கொண்ட பிரிவினர் பட்டியலில் இல்லாமல் இருக்கிறார்கள். இத்தகைய உதவி தேவைப்படும் பெருந்தொகை மக்கள், மலைநாட்டு தோட்டங்களிலும் கொழும்பு மாநகரத்திலும் மிகவும் வறிய நிலையில் வாழ்கிறார்கள். இவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நிவாரணங்களை வேறு பிரிவினர் பெறுகிறார்கள். ஆகவே இந்த இக்கட்டான நிலையில் குறைந்த வருமானம் கொண்ட அனைவரும் கொடுப்பனவுப் பட்டியலில் உள்வாங்கப்பட வேண்டும் - என்றார்.

(ம-14,இ)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 3

காங்கேசன்துறை, ஆதிமயிலிட்டி காசி பூதராயர் ஆலய நிர்வாக சபையின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-14)


**விற்பனைக்குண்டு**
WagonR - Sting ray 2018
உடன் விற்பனைக்குண்டு
077 757 1717

**விற்பனைக்குண்டு**
Mahindra Bolero 4x4 (2017)
விற்பனைக்குண்டு
077 757 1717

**செவிப்புலன் கருவிகள் விற்பனைக்கு**



செவிப்புலன் குறைபாட்டினால் அவதிப்படுகின்றீர்களா? கவலை வேண்டாம் மிகக்குறைந்த தொகையாக ரூ . 7999/- ல் இருந்து சிறந்த செவிப்புலன் கருவி ஒன்றினை பெற்றுக்கொள்ள இன்றே அழையுங்கள்.விரையுங்கள் குறைந்த கையிருப்புக்கள் மாத்திரமே.
(cs.20603) (2.6)
தொடர்புகளுக்கு: 077 434 6245

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 33 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.
- நான்கு பரப்பாகவும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி (காப்பெற் வீதி) முகப்புடன்.
- 784 இலக்க பாதை போக்கு வரத்து பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- பொன்னாலை ரவுண்டப் போட் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி (Jaffna College) இருந்து 1 KM தூரத்தில்.
- ஒரு பரப்பின் (நிலபர்ப்பு) விலை 1½ லட்சம் 150,000/= மட்டும்.
20 அடிப் பாதையுடன்

தொடர்பு: 076 755 8606 077 911 6983


## வவு.வில் இந்த ஆண்டு மட்டும்

# வர்த்தக நிலையங்களுக்கு 16 லட்சம் ரூபா தண்டம்!

வவுனியா மாவட்டத்தில் இந்த ஆண்டு வர்த்தக நிலையங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வழக்குகளில் 16 இலட்சத்து 33 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது என நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் வவுனியா மாவட்ட பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்டத்தில் இந்த ஆண்டு பல சுற்றி வளைப்புகளையும், சோதனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தோம். கடந்த ஜனவரி மாதம் முதல் ஓகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் 292 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு 16 லட்சத்து 33 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட் டுள்ளது. கடந்த மாதம் பிடிக்கப்பட்ட 48 குற்றச்சம்ப வங்களில் 37 மட்டும் வழக்குகளாகப் பதிவுசெய்யப்பட்டன. ஒரு லட்சத்து 51 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமை, விலைப்பத்திரத்தை காட்சிப்படுத்தாது பொருள்களை விற்பனை செய்தமை, கட்டுப்பாட்டு விலையை மீறிப் பொருள்களை விற்பனை செய்தமை, பொருள்களை பதுக்கி வைத்திருந்தமை போன்ற பல்வேறு செயற்பாடுகளுக்கு எதிராகவே வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அண்மைய காலப் பகுதியில் விலைமாற்றம்செய்துவிற்பனை செய்தமை தொடர்பாக அதிக வழக்குகள் பதிவு செய்யப்பட்டன- என்றார். (எ-110)


**ENGLISH ஆங்கிலம்**
பிரத்தியேக வகுப்புகள் உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
(cs20593) (2.6)
077 658 9443 யாழ்ப்பாணம்

**பணிப்பெண் தேவை**
வீட்டில் தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் (சமையல் வேலை உட்பட) தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
074 304 1004

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் புத்தூரில் 141 பரப்புக் காணி (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.
- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலை யில்.
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 1/2 KM தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 1/2 KM தூரம்
- புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காப்பெற் வீதியில் இருந்து இரண்டாவது காணி .
- 775 இலக்க வழி பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
விவசாயம் செய்வதற்கும், வீடுகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் (1 நிலபரப்பு) விலை 1½ லட்சம் (150.000) மட்டும்.
20 அடிப் பாதையுடன்

தொடர்பு: 077 6585 999 076 4365 814 077 8748 135

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 04 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.
- இரண்டு பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில்.
- கைதடி சந்தியிலிருந்து 750 M தூத்தில்
- A09 வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- 20 அடிப் பாதையுடன்

076 7558 606

**TECHNO WORLD**
**தொழில்நுட்பக் கல்லூரி**
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை.
மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலும் ஐந்தாவது முறையாகவும் முன்னிலையில் 98 மாணவர்கள் பல்கலைக்கழகம் தெரிவு.
**A/L 2022 and DAY CLASS க்கான PAPER CLASS வகுப்புக்கள் ஆரம்பம்**
(A/L 2022, DAY CLASS - பகல் நேர வகுப்புக்கள் ஆரம்பம்)
(திங்கள் முதல் வெள்ளி காலை 9.00 மணிமுதல் மதியம் 1.00 மணிவரை)
❖ நேரம் : 9.30 AM ❖ ஆரம்பம் : 04.09.2022 ஞாயிற்றுக்கிழமை
தொடர்பு: 077 017 5346

**வேலைவாய்ப்பு**
வடமாகாணத்தில் இயங்கும்
முன்னணி பத்திரிகை நிறுவனத்திற்கு
வடமராட்சி கிளையில் (நெல்லியடி)
மாலை 5.00 மணிமுதல் இரவு 11.00 மணிவரை
கடமையாற்ற பணியாளர்கள் தேவை.

தகைமைகள்
- க.பொ.த. உயர்தரம் சித்தி
- கணினி அறிவு மற்றும் தொடர்பாடல் திறண்
- சுயவிபரக்கோவையுடன் எதிர்வரும் (05.09.2022) திங்கட்கிழமை
காலை : 09.00 - 1.00 மணிவரையும் மற்றும்
மாலை : 4.00 - 7.00 மணிவரையும் நேரில் வரவும்.

உதயன் வடமராட்சி பிரதேச காரியாலயம், மாலு சந்தி, அல்வாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.